# நாபால்

# பேலியாளின் மகன்

## (25:2-39)

*நன்மையைக் காட்டிலும் தீமையானது தனது செயல்விளைவை உண்டாக்குவதில் மற்றும் தனது இயல்பைப் பரப்புவதில் வல்லமை மிக்கதாக உள்ளது. மாசான பொருளின் ஒரு துளியானது ஒரு பாத்திரம் முழுவதிலும் உள்ள தண்ணீரைக் கெடுத்துவிடும்; ஆனால் ஒரு துளி நல்ல தண்ணீரானது, ஒரு பாத்திரம் நிறைய உள்ள மாசற்ற தண்ணீர் மீது அவ்வளவு வல்லமை கொண்டிருப்பதில்லை. ஒரு பல் அல்லது கால்விரல் ஒன்றில் ஏற்படும் மிகுந்த வலியானது முழு மனிதனையும் பரிதாபத்திற்கு உரியவனாக்கிவிடும், ஆனால் அவனது உடலின் பிற பாகங்கள் யாவும் துன்புறும் பொழுது, நன்றாக உள்ள ஒரு பல் அல்லது கால்விரலானது உணர்ந்தறியத்தக்க வகையில் அந்தத் துயரைத் தணிப்பதில்லை.*

*தீமையின் ஒரு சிறிய பகுதியானது சமாதானத்தையும், இணக்கத்தையும், மகிழ்ச்சியையும் அழித்துப் போட்டுவிட முடியும். 25:2-39ல், இது நாபாலினால் விவரிக்கப்படுகின்றது. வேத வசனத்தில் இவன் என்றென்றைக்கும் "பேலியாளின் மனிதன்" என்று நினைவுகூரப் படுகின்றான். இந்தப் பட்டமானது, இவன் ஒன்றுக்கும் உதவாதவன் என்றும் சாத்தானுடன் தொடர்புடையவன் என்றும் நேரடி அர்த்தம் தருகின்றது.*

*நாபால் ஒரு செல்வந்தனாக இருந்தான், இது அவனுக்கிருந்த செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் திரளான மந்தைகளினால் மெய்ப்பிக்கப்பட்டது (25:2). ஆயினும் அவனது "மேன்மை" என்பது உலகம் எதைக் குறித்துப் பெருமை பாராட்டுமோ, அந்த வகையைச் சேர்ந்ததாகவே இருந்தது. இவன் காலேபின் சந்ததியைச் சேர்ந்தவனாயிருந்தான். இது "நாய்க் குணம் கொண்டவன்" என்று மொழிபெயர்க்கப்படக் கூடும், மற்றும் இது யோசுவாவின் காலத்தில் இருந்த முன்னோடியானவரைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை.*

*ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் வேளை வந்தது. அது கொண்டாட்டங்கள், மகிழ்ச்சி, அபரிமிதமான உபசரிப்பு ஆகியவற்றின் வேளையாயிருந்தது (இ.வ. 2 சாமு. 13:23, 24). "ஆதாயங்கள்" கணக்கிடப்படும், பெற்றுக் கொண்ட பணிகளுக்கான ஊதியங்கள் கொடுக்கப்படும். உலோபியான நாபால் (இவ்விதமாக) வழக்கமாயிருந்த மகிழ்ச்சி மற்றும் உபசரிப்பைக்*

கொண்டிருக்கவில்லை. தாவீது நாபாலுக்குப் பெரிய சேவை ஒன்றைச் செய்திருக்க (25:14-16), அந்த சேவைக்கு ஊதியம் தர நாபால் சீறி விழுந்தான். நாபால் காட்டிய இந்த வெறுப்பான எண்ணப்போக்கானது அவனைத் தனது பூமிக்குரிய மரணத்திற்கு வழிநடத்திற்று.

நாபால் தன்னைச் சுற்றியிருந்தவர்களின் சந்தோஷத்தைக் கெடுத்துப் போட்டான். இவனது முரட்டுத்தனமும் கொடூரமும் நிறைந்த இயல்பினால், தேவபக்தியுள்ள (இவனது மனைவி) அபிகாயில், துன்புற்றாள், மனைவி என்ற அந்தஸ்திற்குரிய அவளது மரியாதை மற்றும் அன்பு யாவும் இறந்து போனது (25:25). வேலைக்காரர்கள் நாபாலை நயப்பாங்கற்றவனாகவும் தேவனுடைய பிரதான விரோதியைச் சார்ந்தவனாகவும் கண்டார்கள்.

## நாபாலின் விதைப்பு

நாபால் சுய நிறைவு உள்ளவனாயிருந்தான் (25:11). இவன் தனக்கு வேறெவரும் தேவையில்லை என்று நினைத்தான். இவன் தனக்கு மனிதருடனும், சர்வ வல்லவருடனும் கூட சமாதானம் தேவையில்லை என்று நம்பினான் (25:6, 10). இந்த எண்ணப்போக்கானது இவன் கடுமையானவனாகவும் கொடுமைக்காரனாகவும் இருக்கக் காரணமாயிற்று (25:3). இவன், இந்த உலகில் தேவன் இல்லாமல் வாழுகின்ற எல்லாருடைய கவலைமிக்க வாழ்வையும் நன்கு விவரிக்கின்றான். நாபால் தனது முரட்டுக்குணத்தின் காரணமாக தனக்கு உதவிமிக்க ஆலோசனை தந்த யாவரிடத்திலும் தலைக்கனத்துடனும் வெறுப்புணர்வுடனும் நடந்து கொண்டான் (25:17ஆ). இவன் நியாயமற்றவனாகவும், உலோபியாகவும் இருந்தான் (25:21). இவன் பிறரை அவமதிப்பவனாகவும் இருந்தான் (25:10-12). இவன் பண்பற்ற அவமானப்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தினான் (25:14). நாபால் தீமையான பேச்சைப் பயன்படுத்தினான். இவனது வார்த்தைகள் கரடுமுரடாக, கொடூரமானதாக, அவமானப்படுத்துவதாக இருந்தன. 25:14ல் "சீறினார்" என்ற வார்த்தையானது, நாபால் "இரை மீது பாயும் பறவையைப் போலப் பாய்ந்தான்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. கட்டுப்பாடற்ற நாவு எப்பொழுதுமே மதியீனனை அடையாளப்படுத்துகின்றது (நீதி. 10:14; 18:6, 7). மதியீனமான பேச்சைப் பயன்படுத்திய நாபால், தாவீதின் மீது இயன்ற அளவு மாபெரும் அவமானத்தைச் சுழற்றி எறிந்தான், அவ்வாறு செய்வதில் அகம் மகிழ்ந்தவனாகக் காணப்பட்டான் (25:10, 11). நாபால் தனது வார்த்தைகளின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமலேயே பேசினான்.

நாபால், மற்றவர்கள் தீமை செய்யும்படி அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தினான். இவனது பிரசன்னம், வார்த்தைகள் மற்றும் நடையுடை பாவனைகள் ஆகியவை, தாவீதை அவரது பண்புக்கு முற்றிலும் ஒவ்வாததைச் செய்யத் தூண்டிற்று (25:13, 22). தாவீது எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு முன்பு தேவனிடம் ஆலோசனை கேட்பது வழக்கம், ஆனால் இம்முறை நாபால், தாவீது தமது சுயகட்டுப்

*பாடு யாவற்றையும் இழந்து போகும்படி அவருக்கு அதிகமாக எரிச்சல் மூட்டினான். இது நியாயமற்றதாயிருந்தது, தாவீது தமது தவறை உணர்ந்தார் (25:32, 33).*

*நாபால் நன்றியற்றவனாகவும் இருந்தான். இவன் தனக்குத் தாவீது செய்திருந்தவை என்ன என்பதை ஒப்புக் கொள்ளவும் இல்லை (25:16, 21). நன்றியுடைமையில் உள்ள இவ்விதமான குறைபாடு எப்பொழுதுமே சாத்தானின் சந்ததியைக் குறிப்பதாக உள்ளது!*

*நாபால் மதுபானம் பண்ணுகிறவனாயிருந்தான். இவன் வெறிகொள்ளு மளவுக்கு அதிகமாய் மதுபானம் அருந்துகிறவனாயிருந்தான். இவன் அதைத் தன்னை மறந்த நிலையில் மகிழ்வுடன் அனுபவித்து சுயமானது தனது விருப்பங்களைக் கட்டுப்படுத்த அனுமதித்தான். இப்படிப்பட்ட பண்பானது சாத்தானைப் பின்பற்றுபவர்களுடன் தொடர்புடையதாக வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது (நீதி. 31:4-6; 20:1 முதலியன).*

## நாபாலின் அறுவடை

*பிசாசின் குணங்களுடன் வாழ்கின்ற ஒருவன் கீழ்த்தரமான விளைவு களையே அறுவடை செய்ய இயலும். நாபாலின் பொல்லாத வழிகளின் நேரடியான விளைவுகள் என்ற வகையில் அவனது வாழ்வானது, அச்சத்திற் குரிய மூன்று விளைவுகளைக் கொண்டது.*

*நாபால் எவரொருவராலும் மதிக்கப்படவில்லை! இவன் செல்வத்தை மகிழ்வுடன் அனுபவித்தான், இப்படிப்பட்ட மேன்மையும் வல்லமையும் இவனுக்கு மதிப்பளித்திருக்க வேண்டும்-ஆனால் அவ்வாறு நடைபெற வில்லை! நாபாலின் செயல்களினால் ஒரு இளைஞன் வெட்கப்படுத்தப் பட்டான் (25:17). இந்த வேலைக்காரனின் முடிவு வார்த்தைகள், நாபால் தனது வேலைக்காரர்களிடத்தில் காண்பித்த மரியாதைக் குறைவைச் சுட்டிக் காட்டுகின்றன. அவர்களைப் பொறுத்தவரை, நாபால் "பேலியாளின் மகன்" என்று அறியப்பட்டிருந்தான் (இ.வ. 2 கொரி. 6:15). தேவபக்தியுள்ள அபிகாயில், தனது கணவன் மீது மதிப்பு வைத்திருக்கவில்லை (25:25). அவளது கருத்தானது வேலைக்காரர்களின் கருத்தை விடவும் தாழ்ந்ததாக இருந்தது. இப்படிப்பட்ட செல்வாக்கானது, தேவன் தம்மைப் பின்பற்று பவர்கள் வளர்த்துக் கொள்ளும்படி விரும்புகின்றவற்றிற்கு நேரெதிராக உள்ளது (மத். 5:16; 1 பேது. 2:11, 12).*

*வரலாற்றில் நாபால் "மாபெரும் மதியீனன்" என்ற வகையில் மிகவும் தாழ இறங்கியுள்ளான். இவன் தனது பெயருக்கு ஏற்றவாறே வாழ்ந்தி ருந்தான் (25:25), ஏனென்றால் இவனது செயல்கள் யாவற்றிலும் தவறு நிறைவேற்றப்பட்டது. இவன் அறிவிலியாக, பொல்லாதவனாக, தேவனற்ற வனாக இருந்தான். கைதிகளை அடைத்து வைக்க இரும்புக் கூண்டு ஒன்றைச் செய்யும்படி பதினோராம் லூயி என்ற பிரான்ஸ் நாட்டு மன்னனுக்கு ஆலோசனை கொடுத்த வேர்டு நகர ஆயர் போலவே நாபாலும் அறிவற்றவனாக இருந்தான். அந்தக் கூண்டிற்குள் ஒரு மனிதன் நிமிர்ந்து நிற்கவோ அல்லது கீழே கிடக்கவோ கூடாமல், எப்பொழுதும் வளைந்த*

*நிலையிலேயே இருக்கும்படி அது கட்டப்பட வேண்டியதாயிருந்தது. சில காலத்திற்குப் பிறகு, அந்த ஆயர் அரசனுக்குப் பிரியமற்றுப் போனார், அப்பொழுது அவர் வடிவமைத்திருந்த கூண்டிற்குள் அவரே முதன் முதலாக அடைக்கப்பட்டார்! அதில் அவர் பதினான்கு ஆண்டுகளாக அடைபட்டுக் கிடந்தார்.*

*நாபாலின் வாழ்வு கசப்பாக முடிவுற்றது (25:37-39). நாபால் எவ்வாறு மரித்தான் என்பது பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஏறக்குறைய நடந்தது என்ன என்பதை அறிந்து அதிகமாய்ப் பயந்ததின் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பினால் இவன் பத்து நாட்களில் இறந்து போனான் என்று சிலர் கூறுகின்றார்கள். மற்றவர்களோ, நாபால் தனது குணத்தில், தாவீதின் மீது மூர்க்க கோபம் கொண்டு, அத்துடன் அபிகாயில் செய்த செயலும் அவனது கோபத்தை அதிகரித்து, அதன் மூலம் மாரடைப்பு ஏற்பட்டு, பத்து நாட்களுக்குள் இறந்து போனான் என்கிறார்கள்.*

*''சாத்தானின் மகனுக்கு'' எப்பொழுதுமே நம்பிக்கையற்ற சாவு காத்துள்ளது. நிச்சயமாக இது, தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றி அதற்குக் கீழ்ப்படிவதற்கு ஒரு உந்துதலாயிருக்கின்றது (நீதி. 5:22; 11:7ஆ; 14:32; சங். 116:15; பிர. 7:1). சவ அடக்கச் சடங்குகளில் பொதுவாக, "அவர் எப்படி வாழ்ந்தாரோ அப்படியே இறந்தார்" என்ற கூற்று பயன்படுத்தப் படுகின்றது. இது நாபாலைப் பொறுத்தமட்டில் எவ்வளவு உண்மையாய் உள்ளது! இது இன்றைய நாட்களின் மனிதர்களுடைய விஷயத்திலும் உண்மையானதாகவே உள்ளது. நமது வாழ்வு கசப்பான வகையில் முடிவடைவதை நாம் விரும்பாவிட்டால், தேவன் இயக்குகின்றபடி நாம் வாழ வேண்டும்.*

## *நாபாலிடமிருந்து இன்றைக்கான பாடங்கள்*

*ஒரு "நாபாலை" திருமணம் செய்துகொண்டு தேவனுக்கு உண்மை நிறைந்தவராக நிலைத்திருத்தல் என்பது சாத்தியமானதாகவே உள்ளது. நாபாலின் வீட்டில் இருந்த சூழ்நிலையானது மகிழ்வற்றதாயிருந்திருக்கக் கூடும். அபிகாயிலின் தேவபக்தி மிகுந்த பண்புகள் மற்றும் நாபாலின் பிசாசுக்குரிய குணங்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு திருமணத்தைக் கசப்பாக மட்டுமே மாற்றியிருந்திருக்கும். இவன் தாழ்ந்த ருசி கொண்டவனாக, பொருளாதாயங்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்த வனாக, தேவனை வெறுப்பவனாக, மற்றும் அருவருப்பான பழக்கங்கள் கொண்டவனாக இருந்தான். இவன் கொடுமையான நாவையும் பயங்கர மான செல்வாக்கையும் கொண்டிருந்தான். இவன் அபிகாயில் வெறுத்த எல்லாமுமாயிருந்தான்! ஆனால் அவள் இவனுடன் தங்கியிருந்தாள். தற்கால ''நாபால்களுடன்'' திருமணத்தைச் சகித்துக் கொண்டிருக்கிற தற்கால "அபிகாயில்களை" நீங்கள் பாராட்டியாக வேண்டும்.*

*பழி வாங்குதல் என்பது ஒருபொழுதும் சரியானதாயிருப்பதில்லை! "பழி வாங்குதல் என்பது பிசாசானவன் பாவியின் வாயில் இடக் கூடிய மிக*

*விலை உயர்ந்த உணவின் துணுக்காக உள்ளது" என்று ஒருவர் சரியாகவே கூறியுள்ளார். நமக்கு எதிராக இழைக்கப்பட்ட தனிப்பட்ட தவறுகளுக்கு பழிவாங்கும் நிலைமையில் நாம் ஒருக்காலும் இருக்கக் கூடாது (25:38, 39; ரோமர் 12:19).*

*இன்றைய நாட்களில் நாம் ஒவ்வொருவரும் வாழ்கின்ற வாழ்வானது, மற்றவர்கள் நாளைய தினம் வாசிப்பதற்கான நிலையான வரலாற்று ஏட்டைப் பதிவு செய்கிறது. உங்களைப் பற்றிய வரலாற்றுக் கூற்று உங்களை ஒரு "நாபால்" என்று பதிவு செய்து விடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.*

*சுயநலமான வாழ்விற்கு (பலனாய் வர) காத்திருக்கும் கவலை மிக்க முடிவை நினைவில் வையுங்கள்! பேரழிவு மட்டுமே வரும் (லூக். 12:20, 21; யாக். 4:13-16).*

## *முடிவுரை*

*படிப்பதற்கு இது எவ்வளவு இருளான பாடமாக உள்ளது! ஒரு தீயமனிதனின் செல்வாக்கு முழு எடுத்துரைப்பின் மீதும் மேகங்களைப் பரப்பி, "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதன்" (தாவீது) தேவனுக் கெதிரான உணர்வான பழிவாங்குதல் என்ற நடவடிக்கையை நாடக் காரணமாயிற்று. தீமையின் ஒரு சிறு துளியானது அதிகமான நன்மையைக் கெடுத்து அழித்து விடக் கூடும்!*

*நமது பூமிக்குரிய வாழ்வை "மதியீனராக" வாழ்வதில் உள்ள துன்ப நிலையை உணர்ந்தவர்களாய் நாம் யாவரும் இந்தப் பாடத்திலிருந்து கடந்து செல்லுவோமாக. சாத்தானின் மகனான நாபாலை நினைவில் வையுங்கள். இவனது தவறைச் செய்ய முன் வராதீர்கள்!*